பக்கங்கள் 15 + 05

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 03 வியாழக்கிழமை 19.09.2024 | அதிர்வு 49

## உணவு விஷமடைந்ததால் 500 ஊழியர்கள் பாதிப்பு!

பொலனறுவை, பக்கமூன பிரதேசத்தில் உள்ள பிரதான தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் ஐநூறுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் இன்று காலை உணவு விஷமடைந்ததன் காரணமாக சுகவீனமடைந்த 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# வாக்கு உங்கள் உரிமை




## கட்டாயம் அதனைப் பயன்படுத்துங்கள் என்று மக்களிடம் தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை

**“வாக்கு உங்கள் உரிமை, பலம். அதனைக் கட்டாயம் பயன்படுத்துங்கள்.” - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.எல்.ரத்நாயக்க.**

**அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே, செப்டெம்பர் 21 ஆம் திகதி இயலுமானவரை காலை வேளையிலேயே சென்று வாக்குரிமையைப் பயன்படுத்திவிடுங்கள்.

வாக்களித்த பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள். தேர்தல் விதி மீறல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம். அவ்வாறு செய்தால் பொலிஸாரால் கைது செய்யப்படக்கூடும்.

அத்துடன், வாக்களிப்பின்போது வாக்குச்சீட்டை படமெடுத்தல், வீடியோ எடுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.” 1 என்றார்.

# நாளைமறுதினம் தேர்தல் சகல ஏற்பாடுகளும் தயார்

## பொலிஸார், முப்படையினரின் பாதுகாப்பும் பலப்படுத்தல்

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நாளைமறுதினம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருக்கின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்தநிலையில், நாடு முழுவதும் பொலிஸார் மற்றும் முப்படையினர் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் 04▶









# ‘தேர்தல் முறைமையும் வாக்குரிமையும்’ கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உசாவல்



கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் 869 ஆவது அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை மாலை சங்கத்தின் விநோதன் மண்ட பத்தில் வீரகத்தி தனப ாலசிங்கம் தலை மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேரா சிரியர் அ. சர்வேஸ்வரன் “தேர்தல் முறைமையும் வாக்கு ரிமையும்” என்னும் தலைப்பில் உரையாற்றுகின்ற மையும் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நூல் ஒன்றை அன்ப ளிப்பு செய்வதையும், கலந்து கொண்டோரையும் காண லாம்

# பரீட்சை வினாத்தாள் சர்ச்சை குறித்து விசாரணை ஆரம்பம்

நாட்டில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புல மைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாப்பத்திரம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை சம்பந்தமாக விசாரணைகள் ஆரம் பமாகியுள்ளன.

பரீட்சைகள் திணைக்களமும், குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன என்று கல்வி அமைச்சு இன்று அறிவித்துள்ளது.

விசாரணைகள் முடிவடைந்த பின்னரே இந்தப் பிரச்சினை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் சுவரொட்டிகள் இதுவரையிலும் அகற்றப்படவேயில்லை

## பவரல் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் தகவல்

(கனகராசா சரவணன்)

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந் துறை தொகுதியில் 2 முறைப்பாடும் கல்முனை தொகுதியில் 3 முறைப் பாடுகளும் பொத்துவில் தொகுதியில 3 முறைப்பாடுகளும் அம்பாறை தொகுதியில் இருந்து 3 முறைப்பாடுகள் உட்பட 11 தேர்த்ச்ல் முறைப்பாடுகள் இதுவரை கிடைத்துள்ளன. அதே வேளை தேர்தல் பிரச்சாரம் நேற்று இரவு 12 மணிவரை முடிவுற்றாலும் மாவட்டத்தில் இரண்டுமணிவரை சில பிரசாரக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன. சுவரொட்டிகள் அகற்றப்படாத நிலை காணப்படுகின்றது என தேர்தல் கண் காணிப்பு அமைப்பான பவ்ரலின் மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பெவஸ் ஒவ் மீடியா கற்கை நிலையத்தில் இன்று வியாழக் கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டத்திலுள்ள 115 வாக்களிப்பு நிலையங்களில் 115 நிலைகொள் கண் காணிப்பாளர்களையும் 16 நடமாடும்



கண்காணிப்பாளர்களையும் ஒரு தேர்தல் தொகுதிக்கு ஒருவாகன வீதம் 4 தொகுதிகளிலும் 4 வாகனங்களிலும் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளமையுடன் வாக்கு கணக்கெடுப்பு நிலையத்தில் 10 கண்காணிப்பாளர்கள் வாக்கு எண்ண ஆரம்பிக்கும் போது இருந்து வாக்கு எண்ணிமுடியும்வரை கண்கா ணிப்பில் இருப்பார்கள்.

அதேவேளை இந்த முறை இரண் டாவது விருப்பு வாக்கு எண்ணவேண்டிய தேவை ஏற்படும். அப்படியாயின் 15 மணித்தியாலம் தங்கியிருந்து கண் காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணி யில் ஈடுபடுவார்கள். அதேபோன்று நீண்டநாள் கண்காணிப்பாளர்கள் 4 பேர் நியமிக்கப்பட்டு அவர்கள் மறை முகமாக கண்காணிப்பில் ஈடுபடுவார் கள். வேட்பாளர்களின் நிதி செலவு தொடர்பாக ஆராய்வதற்கு 3 பேரை நியமித்துள்ளோம்.

தேர்தல் பிரச்சாரம் நேற்று இரவு 12 மணிவரை முடிவுற்றாலும் மாவட்டத்தில் அதிகாலை இரண்டு மணிவரை சில பிரச்சாரக் கூட்டங்கள் இடம்பெற்றுள் என. இது தொடர்பாக தலைமைக் காரியாலயத்துக்கு அறிவித்துள்ளோம். அதேபோன்று சுவரொட்டிகள் அகற் றப் படாதுள்ளமை தொடர்பாக பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள் ளோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலை விட இந்த வருடம் குறைவான முறைப்பாடு கிடைத்துள்ளது. தற்போதை தேர்தல் சட்ட விதிகளின்படி வாக்குச் சாவடிக ளுக்குள் முகவர்கள், கண்காணிப்பாளர் கள் மற்றும் அந்த வாக்குசாவடிகளில் பணியாற்றும் பொலிஸார், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மட்டும்தான் உள்நுழையமுடியும். – என்றார்.

# கடந்த 24 மணி நேரத்தில் வாகன விபத்துகளில் 14 வயதுச் சிறுமி உட்பட 6 பேர் உயிரிழந்தனர்

(கனகராசா சரவணன்)

அம்பாறை காரைதீவு, கிளிநொச்சி, வெயாங்கொடை, கட்டுகஸ்தோட்டை, வவுனியா – ஓமந்தை ஆகிய பிரதேசங்களில் கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 14 வயது சிறுமி ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளமையுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனவும் 4 பேரைத் தாங்க கைது செய்துள்ளனர் எனவும் அந்தந்தப் பிரதேச பொலிஸார் தெரிவித்தனர்.




அம்பாறை, காரைதீவு பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிப்பள்ளியில் இருந்து சம்மாந்துறை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றுடன் குறுக்கு வீதியில் இருந்து பிரதான வீதிக்கு சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய தந்தை படுகாயமடைந்தமையுடன் அவரது 14 வயது மகளான சிறுமி உயிரிந்துள்ளார். படுகாயமடைந்த தந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பஸ் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதேவேளை கிளிநொச்சியில் கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் வீதியில் பன்னங்கண்டி பாலத்திற்கு அருகாமையில் இன்று அதிகாலை வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞன் மீது டிப்பர் வாகனம் மோதிய விபத்தில் பன்னங்கண்டி பகுதியைச்சேர்ந்த அந்தோனி அல்பிரட்அனுஷன் என்ற இளைஞன் உயிரிழந்தான். டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிலுள்ள பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி நேற்று இரவு பயணித்த மோட்டார் சைக்கிள் ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் வீதி ஓரத்தில் சைக்கிள் ஒன்றுடன் நின்றிருந்தவர் மீது மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த – ஓமந்தை பகுதியைச் சேர்ந்த – 46 மற்றும் 48 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளனர் என ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை வெயாங்கொடை, மினுவாங்கொடை பிரதான வீதியில் 20 ஆவது மைல் கல் பகுதியில் வீதியை குறுக்கறுத்த பெண் ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் படுகாயமடைந்த வெயங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய பெண் மினுவாங்கொடை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார். இதனையடுத்து மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கண்டி- யாழ்ப்பாணம் ஏ-09 வீதியில் கட்டுகஸ்தோட்டை நகரில் பாதசாரி ஒருவர் மீது கார் மோதிய விபத்தில் 71 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்தார். கார்ச் சாரதியைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துகள் இடம்பெற்ற பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு தேசியப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் வழங்கினார்

தேசிய பாதுகாப்பு சபையின் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இன்று இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்பு தரப்பினருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், வேட்பாளர்களின் பாதுகாப்பு மற்றும் வாக்குச்சாவடிகள், வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

பொது மக்களின் அன்றாட செயல்பாடுகளை வழமைபோன்று முன்னெடுத்துச் செல்வதை உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதி இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

### ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு

# பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை




நாடளாவிய ரீதியில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் நாளை வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தேர்தல்கள் திணைக்களம் விடுத்துள்ள கோரிக்கையின் பிரகாரமே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை மீளத் திறக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# தொகுதி மட்ட தேர்தல் அலுவலகங்களை இன்று நள்ளிரவுக்கு முன் நீக்க வேண்டும்

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

தொகுதி மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள அனைத்து தேர்தல் அலுவலகங்களையும் இன்று நள்ளிரவுக்கு முன்னர் நீக்குவது அவசியம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று நள்ளிரவு முதல் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு பிரதான அலுவலகமும், பழைய தொகுதிக்கு ஒரு அலுவலகமும் மாத்திரமே திறக்கப்பட முடியும்.

ஏற்கனவே நிறுவப்பட்ட ஏனைய அனைத்து அலுவலகங்களையும் அந்தந்த வேட்பாளர்கள் அகற்ற வேண்டும் என்பதுடன் அவ்வாறு அகற்றாவிட்டால் பொலிஸார் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குகளை எண்ணும் பணி தேர்தல் தினத்தன்று பிற்பகல் 4.15 மணிக்கு ஆரம்பமாகும். எண்ணும் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து உரிய முடிவுகளை ஊடகங்களுக்கு வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ முடிவுகள் கிடைக்கப்பெறும் வரை உத்தியோகபூர்வமற்ற முடிவுகள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்." – என்றார்.

# தலா ஐம்பது லட்சம் ரூபா செலவில் வடக்கில் 32,000 வீடுகள் அமைப்பு

### சன் பவர் குழுமத்தின் ஏற்பாட்டில் என அறிவிப்பு

வடக்கு மாகாணத்தில் சன் பவர் குழுமத்தினால் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள 32 ஆயிரம் வீடுகளுக்கான நிதி மூலத்திற்குரிய அங்கீகாரம் கிடைத்துள்ளது என வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட வங்கி ஒன்றின் ஊடாக இந்தத் திட்டத்திற்கான நிதி வழங்கப்படவுள்ளது. தலா 50 லட்சம் ரூபா செலவில் முற்று முழுதாக இலவசமாக பயனாளர்களுக்கு இந்த வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ள சன் பவர் குழுமத்தினால் சுமார் நான்காயிரம் ஏக்கர் காணியில் சூரிய மின்கல பூங்கா (Solar Park) நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான முழுமையான காணி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை கடன் விடுவிப்பு தொடர்பான சான்றுபடுத்தல் பெறப்படவுள்ளது. இந்த இரண்டு செயற்பாடுகளும் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இலவச வீட்டு திட்டத்திற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தலா ஐம்பது லட்சம் ரூபா செலவில் 32 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. வீட்டு நிர்மாணப்பணிகள் அனைத்தும் சன் பவர் குழுமத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளன. வீடு முழுமையாக நிர்மாணிக்கப்பட்டதன் பின்னரே பயனாளர்களிடம் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்குரிய முன்மொழிவிற்கான அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### உணவு...

நிலையில் பக்கமூன, அத்தனகடவல பிரதேச வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பக்கமூன பொலிஸார் தெரிவித்தனர்.

நோய்வாய்ப்பட்ட தொழிலாளர்கள், ஆடைத் தொழிற்சாலையில் இருந்து பஸ்கள் மற்றும் அம்புலன்ஸ்கள் மூலம் பக்கமூன பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பக்கமூன பிரதேச வைத்தியசாலையில் இடப் பற்றாக்குறை காரணமாக அதிகளவானோர் பஸ்கள் மற்றும் அம்புலன்ஸ்கள் மூலம் அத்தனகடவல பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

அத்தனகடவல மற்றும் பக்கமூன வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட ஆடைத் தொழிலாளர்கள் மற்றும் பணிப்பெண்களின் நிலை கவலைக்கிடமாக இல்லை என்றும், அவர்கள் சிகிச்சை பெற்று வருவகின்றனர் என்றும் பக்கமூன மற்றும் அத்தனகடவல வைத்தியசாலைகளின் பேச்சாளர்கள் தெரிவித்தனர்.

### நாளைமறுதினம்...

இன்று வியாழக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாடு முழுவதும் தேர்தல் கடமைகளுக்காக 63ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதற்கு மேலதிகமாக முப்படையினரும் பாதுகாப்பு வழங்கவுள்ளனர்.

ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 2 பொலிஸார் வீதம் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. அதனைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து வழங்கவுள்ளனர்.

நாடு முழுவதும் பொது மக்களுக்காகப் பாதுகாப்பும் மற்றும் ஏனைய தேர்தல் செயற்பாடுகளுக்காகப் பாதுகாப்பும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸார், முப்படையினர் மற்றும் புலனாய்வுத்துறையினர் இணைந்து விசேட செயல்பாட்டு மையமொன்றை உருவாக்கியுள்ளனர். இந்த மையம் தேர்தல்கள் திணைக்களம் மற்றும் ஆணைக்குழுவுடன் இணைந்து பணியாற்றும்." – என்றார்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜெனிவா இழுத்தடிப்பு

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்து சர்வதேச நீதி முறைமைகளுக்கு அமைவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப் படுத்தப்பட வேண்டும் என சர்வதேச சமூகம் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றது.

சர்வதேசத்தின் இந்தக் கருத்து நிலைப்பாடு கடந்த 15 ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனிவா அமர்வுகள் மூலம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக ஜெனிவா அமர்வுகளில் இரண்டு, மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும் கூட, மேற்படி பொறுப்புக் கூறல் மற்றும் நீதி நிலைநாட்டப்படல், உண்மைகள் கண்டறியப்படல், மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படல் போன்ற விடயங்களில் எந்த முன்னேற்றமும் - நகர்வும் - இந்தப் பதினைந்து ஆண்டுகளில் நடக்கவேயில்லை - யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பான ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களைப் பதியும் பொறிமுறை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகமே நேரடியாக ஆரம்பித்திருப்பதைத் தவிர.

ஜெனிவா தீர்மானங்களின் வரிசையில் கடைசியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தற்போதைய ஜெனிவா அமர்வுடன் காலாவதியாவதால் இலங்கையைத் தொடர்ந்து கட்டுக்குள் வைத்திருப்பதற்கு புதிய பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட இருக்கின்றது.

ஆனால், இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலும், அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தலும் நடைபெறக்கூடிய சூழல் இருக்கின்றமையால் - நாட்டில் புதிய அரசுத் தலைவரும், புதிய அரசும் வரக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றமையைக் கவனத்தில் கொண்டு - ஜெனிவாவில் புதிய பிரேரணை ஒன்றைக் கொண்டு வராமல், இப்போது காலாவதியாகும் பழைய தீர்மான வாசகங்களை அப்படியே நீடிக்க வழி செய்யும் விதத்திலான மிகச்சிறிய வாசகங்களை மட்டும் கொண்ட புதிய பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தச் சுருக்கப் பிரேரணையின் வடிவம் பெரும்பாலும் இன்று அல்லது நாளை வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

பழைய தீர்மானத்தின் காலத்தை நீடிக்கும் பிரேரணை என்பதால் அது குறித்து வாக்கெடுப்புக்கு போகாமல் அப்படியே ஏகமனதாக அது ஏற்றுக் கொள்ளப்பட வாய்ப்புண்டு. பழைய தீர்மான வாசகங்கள் அப்படியே உள்ளடங்கலாக அதன் செல்லுபடி காலம் அடுத்த ஓரிரு வருடங்களுக்கு நீடிக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி இலங்கை தொடர்பான தீர்மானங்களை நீடித்து இழுத்தடிப்பதன் மூலம் இலங்கையில் இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நியாயம் கிடைத்து விட மாட்டாது என்பது பெரும்பாலும் உறுதி. ஆயினும், இலங்கையில் இழைக்கப்பட்ட இந்தத் தவறுகள், அட்டூழியங்கள், அடாவடித்தனங்கள், கொடூரங்கள், குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை கவனிக்காமல் விடுபட்டுப் போய்விடவில்லை, அவை இன்னமும் சர்வதேசத்தின் கண்காணிப்பு திரையில்தான் உள்ளன என்ற 'அச்சுறுத்தல் அலாரம்' கொழும்புக்கு திரும்பத் திரும்ப உணர்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் என்பது மட்டும்தான் இதில் உள்ள ஒரே ஒரு சாதகமான அம்சமாகும்.





# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் குடைசாய்ந்தது கனரக வாகனம்!


(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பின்னதுவைக்கும் பத்தேகமவுக்கும் இடையில் இன்று (19) வியாழக்கிழமை காலை கொள்கலன் பாரவூர்தி ஒன்று கவிழ்ந்து விபத்துக் குள்ளானது.

கொள்கலன் வாகனத்தின் பின்பகுதியில் இரண்டு டயர்களும் வெடித்ததன் காரணமாக சாரதியால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் கொள்கலன் கவிழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கொழும்பு நோக்கிச் செல்லும் இரண்டு பாதைகளில் ஒரு பாதை குறிப்பிட்ட சேரத்துக்குத் தடைப்பட்டது. மற்றைய பாதையில் வாகனப் போக்குவரத்து இடம்பெற்றது.







# ஆயிரக் கணக்கான மக்கள் வெள்ளத்தில் கிண்ணியா சாதனை வீரருக்கு வரவேற்பு

(எச். எம். ஹலால்தீன் )

இலங்கையின் கரையோர மாவட்டங்களைச் சுற்றி சுமார் 1500 கிலோ மீற்றர் தூரத்தைக் கால்நடையாக நடந்து 42 நாள்களில் நிறைவு செய்த எஸ். கே. முலாபீரை வரவேற்கும் நிகழ்வும் ஊர்வலமும் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றன.

கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் பெருந்திரளான மக்கள் மத்தியில் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி தலைமையின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹரூப், கழகங்களின் உறுப்பினர்கள், கிண்ணியா நகர சபை செயலாளர், மதரஸா மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிண்ணியாவின் நீண்ட பாலத்தில் இருந்து பெருந்திரளான மக்கள் மத்தியில் இவருக்கான வரவேற்பு வழங்கப்பட்டது.

கல்லூரி மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் கிண்ணியாவின் பாரம்பரிய சீனடி விளையாட்டுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் இலங்கையின் கரையோரங்களை சுற்றி 45 நாள்கள் கால்நடையாக நடந்து சாதனை படைத்து வேர்வலைச் சேர்ந்த ஷஹ்மின் சாதனையை முறியடித்து கிண்ணியாவை சேர்ந்து எஸ். கே. முலாபிர் 42 நாள்கள் கால்நடையாக நடந்து சாதனை படைத்துள்ளார்.





# முத்தமிழ் வித்தகரின் துறவற தின நிகழ்வுகள் களுவாஞ்சிக்குடியில்

(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் பிரதேச ஆலயங்கள், அறநெறிப்பாடசாலைகளுடன் இணைந்து ஏற்பாடு செய்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா கடந்த (14) சனிக்கிழமை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த விழாவில் ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜி மகராஜ் மற்றும் சிறப்பு அதிதியாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன் ஆகியோர் கலந்து கெண்டனர்.

களுவாஞ்சிகுடி மாணிக்க பிள்ளையார் ஆலய முன்றலில் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான பண்பாட்டு ஊர்வலமானது பிரதான வீதியூடாக பிரதேச செயலகத்தை அடைந்ததும், ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜி மகராஜ் அவர்களினால் சுவாமி விபுலானந்தரின் திருவுருவததுக்கு மாலை அணிவித்தல் மற்றும் பூசை நிகழ்வுடன் பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன்போது அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கதாப்பிரசங்கம், பேச்சு, பாடல், நாடகம் மற்றும் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டன. அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கே. ஜெயராஜியால் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தினம் தொடர்பான விசேட ஆன்மீக சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டது.

மேலும் இந்த நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், ஆலயங்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.









# தேசிய மட்டத்துக்குத் தெரிவான புத்தாக்கப்பிரிவின் கண்டுபிடிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தற்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் பொருளாதார ரீதியாக உதவக் கூடிய தொழில் நுட்பத் துறையில் பட்டதாரி மாணவர்களை உருவாக்கிவரும் சம்மாந்துறை, றாணமடு இந்துக் கல்லூரியானது, இவ்வருடம்(2024) புத்தாக்கப் பிரிவை ஆரம்பித்து இளம் கண்டு பிடிப்பாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இதன் விளைவாக உயர்தர தொழில் நுட்பப் பிரிவு மாணவர்களால் இலத் திரனியல் கழிவுகளைக் கொண்டு உருக்கி ஒட்டும் “வெல்டிங் மெசின்” ஒன்றை புத்தாக்கம் செய்துள்ளனர்.

இந்தப் புத்தாக்கம் கிழக்கு மாகாண மட்டப் புத்தாக்கப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்து தேசிய மட்டப் புத்தாக்கப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.





# செட்டிபாளையத்தின் வரலாற்று நூல் வெளியீட்டு விழா!

(வி.ரி. சகாதேவராஜா)

“செட்டிபாளையம் கிராம மக்களின் வாழ்வும் வளமும்” என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த (16) திங்கட்கிழமை செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந் நூல் உருவாக்கத்துக்கும் வெளியீட்டுக்கும் இணைப்பாளராகத் திருவருள் நுண்கலை மன்றம் செயற்பட்டது.

ஓய்வுநிலை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி சிதம்பரப்பிள்ளை அமலநாதன் தொகுத்த இந்த நூலின் வெளியீட்டு விழா, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம் தலைமையில் நடைபெற்றது .

பிரதம அதிதியாக விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப் பிள்ளை மகேசன் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகணவும் கௌரவ அதிதிகளாக பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் த.ஶ்ரீதரன், மன்முனை தென் எருவில் பற்று உதவி பிரதேச செயலாளர் சத்திய கௌரி தரணிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நூல் ஆய்வுரைகளைக் கிழக்குப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான துறைப் பேராசிரியர் வே. குணரெத்தினம் மற்றும் கட்புல தொழில்நுட்ப கலைத் துறை தலைவர் கலாநிதி சு.சிவரெத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர்.ஏற்புரையை நூலாசிரியர், ஓய்வு நிலை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி சிதம்பரப் பிள்ளை அமலநாதன் நிகழ்த்தினார்.









# யானைகளால் ஏற்படும் சேதத்தை தடுக்கும் விஷேட கலந்துரையாடல்

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

பிரதேச மட்ட யானைகள் பாதுகாப்பு மற்றும் யானை மனித மோதல்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டமானது நாவிதன்வெளி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் பே.பிரணவரூபன் தலைமையில் அண்மையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தின்போதுஇ நாவிதன்வெளி பிரதேச எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் யானைகள் மனித மோதல்கள் மற்றும் யானைகளின் இறப்பை தடுத்து பாதுகாப்பது பற்றியும்இ யானைகளால் ஏற்படும் சேதத்தைத் தடுப்பதற்கு ஏற்ற வழிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



யானைகளை வெடி மூலம் விரட்டல், முள்கள் உள்ள பழ மரங்களை நடல்இ திண்மக் கழிவு கொட்டப்படும் இடங்களை இல்லாமல் செய்தல்இ சொறிக்கல்முனை எல்லை வீதிகளுக்கு மின்குமிழ் பொருத்துதல் இ பாதைகளின் இரு மருங்கிலும் உள்ள புதர்களை அழித்து சுத்தம் செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் செ.சிவம், பிரிவுக்குப் பொறுப்பான வன ஜீவராசிகள் திணைக்களத்தின் சுற்றுவட்டக் காப்பாளர் லோரன்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கமநல சேவைகள் அமைப்புக்கள்இ சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள், நாவிதன்வெளி பிரதேச சபை பிரதிநிதிகள், கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்இ கோட்டக்கல்வி பணிமனையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்இ கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் பிரிவுகளுக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச சுற்றுச்சூழல் பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்இ குடியேற்ற உத்தியோகத்தர்இ காணி பயன்பாட்டு வெளிக்கள உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

# சிரேஷ்ட பிரஜைகளுக்கு சேவை நிலையங்களில் முன்னுரிமை வழங்கி உதவுமாறு கோரிக்கை!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலுமுள்ள முதியோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் தமது தேவையை நிறைவேற்றுவதற்காக வரும் சேவை நிலையங்களில் முன்னுரிமை வழங்கி அவர்களின் தேவைகளை விரைவாக நிறைவேற்றி கொடுக்குமாறு சாய்ந்தமருது ஓய்வுதியர் சங்கம் கேட்டுள்ளது.

தமது வாழ் நாளில் பலவிதமான திணைக்களங்களிலும் பாடசாலைகளிலும் சேவையைச் செய்து தற்போது வயதான நிலைமையில் தமக்கேற்படும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அரச திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், தபாலகம் , வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், நூலகம், இலங்கை மின்சார சபை மற்றும் வங்கிகளுக்கு செல்லும் போது நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இதனால் பலவிதமான கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

இதனால் முதியோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மதிப்பளித்து அவர்களின் தேவைகளை உரிய வேளைக்கு நிறைவேற்றிக் கொடுக்கத் திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென ஓய்வுதியர் சங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை, சில சேவை நிலையங்களில் முதியோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கென தனியான பிரிவு ஆரம்பிகப்பட்டுள்ளமைக்கு தமது நன்றியையும் ஓய்வுதிர் சங்கம் தெரிவித்துள்ளது.





# மணி மாஸ்டர் விருதுக்கான திருக்குறள்; வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மணி மாஸ்டர் விருதுக்கான திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று புதன்கிழமை (18) மாலை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

வி.எம்.சி.ரி. நிறுவனத்தின் இயக்குநர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.



கௌரவ விருந்தினரான மன்னார் உதவிக் கல்விப் பணிப்பாளர் பா. ஞானராஜ் மற்றும் பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. மன்னார் மாவட்ட அரச அதிபர், அவரின் மகத்தான சேவையைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.







# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நிகழ்வுகள்

(மஸ்கெலியா)

தலவாக்கலையில் அமைந்துள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விசேட நிகழ்வு இடம்பெற்றது.

நூற்றாண்டு விழா பற்றிய அதிகார பூர்வ அறிவிப்பு, அதற்காக நிறுவப்பட்ட நூற்றாண்டு விழா செயலகத்தின் செயல்பாடுகளைத் திறந்து வைத்தல் மற்றும் நூற்றாண்டு விழாவின் உத்தியோகபூர்வ சின்னம் மற்றும் கருப்பொருள் வெளியீட்டு விழா என்பன இங்கு நடைபெற்றன.



நூற்றாண்டு விழாவுடன் இணைந்து, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் யூடியூப் சேனலின் உத்தியோக பூர்வ வெளியீடு, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட அறிவு மற்றும் தொழில் நுட்பத்தை தேயிலை பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள், உற்பத்தியாளர்கள் உட்பட அனைத்து தேயிலை தொழில் பங்குதாரர்களுக்கும் திறம்பட விநியோகிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஏற்றுமதியாளர்கள் மற்றும் தகவல்களைத் திறம்பட பயன்படுத்துவதற்கான இடங்களை உருவாக்குதல் மற்றும் அதன் ஒளிபரப்பு நடவடிக்கைகளும் ஒரே நேரத்தில் தொடங்கப்பட்டன.

இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. பி. ரணதுங்க, பிரதிப் பணிப்பாளர் கலாநிதி கே. ரவீந்திரநாத், தாவர நோயியல் துறைத் தலைவர் டாக்டர் கங்கா சின்னையா, தாவர உடலியல் துறை டாக்டர் சேனல் தமயந்தி, உயிர் வேதியியல் துறை டாக்டர் ஆர். கே. ஏ. அமலி, பெருந்தோட்டக் கம்பனிகளின் நிறைவேற்று அதிகாரிகள், சிரேஷ்ட முகாமையாளர்கள், தோட்டப் பிரதிநிதிகள், தோட்ட முகாமையாளர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விரிவுரையாளர்கள், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.







# சிறைக்கைதிகள் மறுவாழ்வுக்கான திறன் விருத்தி பயிற்சிகள் ஆரம்பம்

சிறைச்சாலையில் குற்றங்களுக்கான தண்டனைகளை அனுபவித்து வரும் கைதிகளுக்கு அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கான வழிகாட்டலுக்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

யாழ்பாண சிறைச்சாலை கைதிகளுக்கான திறன் விருத்தி பயிற்சிக்கான வாய்ப்பு சிறைச்சாலை அத்தியட்சகரின் ஆதரவுடன் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் லண்டன் ரட்ணம் நிதியம் ஆகியவற்றின் நிதி ஆதரவுடன் தேசிய தொழிற் பயிற்சி நிறுவன வளவாளர்களின் பங்களிப்போடு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.



இந்த நிகழ்வை ரட்ணம் நிதியத்தின் ஸ்தாபகர் டாக்டர் நித்தியானந்தன் அவர்தம் பாரியார் திருமதி சரோஜினி நித்தியானந்தன் மற்றும் ஐஎம்எச்ஓ நிறுவன இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

முன்னாள் பணிப்பாளர் கிருஷ்ணகுமார், திட்ட இணைப்பாளர் துஷாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

செயற்றிட்டத் தொகுதியை, பெயர்பலகையை திரைநீக்கி ஆரம்பித்து வைத்த டாக்டர் நித்தியானந்தன், இது கைதிகளும் மனிதர்கள் என்றவகையில் அவர்களுக்கான ஒரு வரப்பிரசாதம்.

இதற்கு முழுமையாக உதவியாக செயற்பட்ட சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் மற்றும் அவரது சக உதவியாளர்களும் போற்றத்தக்கவர்கள் எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து கைதிகளின் செயற்றிறன் காட்சிக் கூடமும் விற்பனை கூடமும் திறந்து வைக்கப் பட்டன.

இந்தப் பயிற்சி ஆண் கைதிகளுக்கானது. பயிற்சியின் நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும். ஏற்கனவே பெண் கைதிகளுக்கான இத்தகைய பயிற்சி கடந்த ஏப்பிரல் மாதமளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# மீண்டும் சேவையை ஆரம்பித்த நெடுந்தாரகை பயணிகள் படகு!

சுமார் ஒரு வருடத்தின் பின்னர் நெடுந்தாரகை பயணிகள் படகு இன்று தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

படகில் மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பணிகளை தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸினால் , வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நெடுந்தாரகை பயணிகள் படகு இன்று காலை உத்தியோகப்பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

நெடுந்தீவு இறங்குத்துறைக்குச் சென்ற ஆளுநர், படகை பார்வையிட்டார். இதுவரை காலம் மாகாண சபையின் பொறுப்பில் காணப்பட்ட இந்த படகானது 52 மில்லியன் ரூபா செலவில் திருத்தப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமது தீவில் நீண்டகாலமாக காணப்பட்ட போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்தமை தொடர்பில், ஆளுநருக்கு நெடுந்தீவு மக்கள் நன்றியைத் தெரிவித்தனர். ஆளுநரின் கடும் முயற்சியின் பயனாக நெடுந்தாரகை இன்று மீண்டும் தமது சேவையை ஆரம்பிப்பதாகவும் மக்கள் குறிப்பிட்டனர்.


நெடுந்தாரகை பயணிகள் படகின் திருத்தப் பணிகளுக்காக துரித நடவடிக்கையை மேற்கொண்ட ஜனாதிபதிக்கும், ஜனாதிபதி செயலகத்திற்கும், துறைசார் அமைச்சுக்கும் இதன்போது ஆளுநர் நன்றியைத் தெரிவித்தார். தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இன்று முதல் பயணிகள் சேவையை ஆரம்பித்துள்ள நெடுந்தாரகை படகு தினமும் நெடுந்தீவில் இருந்து ஒரு தடவை குறிகட்டுவான் இறங்குத்துறைக்குப் பயணிக்க உள்ளது. நெடுந்தாரகை படகில் ஒரு தடவையில் 80 பேர் பயணிக்க முடியும்.









# "ஒரே நாடு ஒரே தேர்தல்"

## நாட்டின் இயல்பான போக்கை சீர்குலைக்கும்!




"ஒரே நாடு ஒரே தேர்தல்" திட்டம் நாட்டின் இயல்பான போக்கை சீர்குலைக்கும்." என தமிழ் நாடு முதல்வர் மு.க. ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம், சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் வாக்குப்பதிவுக்கு வகை செய்யும் "ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு" பிரதமர் மோடி தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பதிவில்,

- ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் நாட்டின் இயல்பான போக்கை சீர்குலைக்கும்.
- ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது. இது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது.
- ஒரே நாடு ஒரே தேர்தல் நாட்டின் இயல்பான போக்கை சீர்குலைக்கும்.
- பா.ஜ.கவின் பேராசையை திருப்திபடுத்துவதற்காக இந்திய ஜனநாயகத்தை வளைக்க முடியாது.
- திசை திருப்பும் முயற்சிகளில் ஆற்றலை வீணடிக்காமல் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வுப் பிரச்சனைகளைத் தீர்க்க முற்படுமாறு மத்திய அரசுக்கு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சாத்தியக் கூறுகள் இருப்பதில் மகிழ்ச்சி!



"ஒரே நாடு ஒரே தேர்தல்" என்ற சிறப்பான செயல் முறை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உருவாகி இருப்பதில் மகிழ்கிறேன்." என பா.ஜ.க. நிர்வாகியும், நடிகருமான சரத்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:–

"ஒரே நாடு ஒரே தேர்தல்" என்ற சிறப்பான செயல் முறை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உருவாகி இருப்பதில் மகிழ்கிறேன்.

ஒவ்வொரு ஐந்தாறு மாத இடைவெளிகளில் ஏதாவது ஒரு தேர்தல நடைபெற்றுக் கொண்டே இருப்பதால், தேர்தல் விதிமுறைகள் காரணமாக மத்திய அரசின் நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடையக் கால தாமதம் ஏற்படுகிறது என்பது முக்கிய காரணம்.

"ஒரே நாடு ஒரே தேர்தல்" என்பது மக்கள் நலன், நாட்டு நலன் என அனைத்தையும் உள்ளடக்கிய தேர்தல் செயல்முறை என்ற அடிப்படையில், போலித் தகவல்களை நம்பாமல் மக்கள் சுயமாகச் சிந்தித்து தங்கள் கருத்துகளைக் கருத்துக் கேட்பின் போது பதிவு செய்து, கட்சிப் பாகுபாடின்றி மக்கள் இந்தத் தேர்தல் செயல்முறையை வரவேற்பார்கள் என நம்புகிறேன்."

– இவ்வாறு அவர் கூறினார்.





### பேஜர் - வாக்கி டோக்கி வெடிப்புகளைத் தொடர்ந்து

## லெபனான் மீது இஸ்ரேல்

# வான் தாக்குதல்

லெபனானின் தெற்குப் பகுதியில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

காசாவில் ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் நோக்கில் போரிட்டு வரும் இஸ்ரேல் இராணுவத்துக்கு, அண்டை நாடான லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பினர் பெரும் தலைவலியாக இருக்கின்றனர். ஹமாஸ்க்கு ஆதரவாக தினந்தோறும் இஸ்ரேலை இந்த அமைப்பினர் தாக்கி வருகின்றனர்.

இதனால் இஸ்ரேலும் ஹிஸ்புல்லா அமைப்பினரைக் குறிவைத்து லெபனான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்காகப் பல்வேறு வழிகளைக் கையாண்டு வருகிறது.

இந்நிலையில் எதிர்பாராத வகையில் லெபனானில் பயன்பாட்டில் உள்ள பேஜர்கள் வெடித்து பெரும் சேதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் பின்னணியில் இஸ்ரேல் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பேஜர்களைத் தொடர்ந்து ‘வாக்கி டோக்கி’களும் பல்வேறு இடங்களில் வெடித்துச் சிதறின. இதில் தற்போது வரை 34 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு பின்னணியில் இஸ்ரேல் உள்ளது எனக் குற்றச்சாட்டு எழும் சூழலில், லெபனான் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதலை நடத்தியுள்ளது.

லெபனானின் தெற்குப் பகுதியில் ஹிஸ்புல்லா அமைப்பின் கட்டமைப்புகளைக் குறிவைத்து இஸ்ரேல் இந்த வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

பக்கங்கள் 05

# கனடா முரசு

வியாழக்கிழமை 19/09/2024

## ஸ்காப்ரோ தீ விபத்தில் ஒருவர் பரிதாபச் சாவு!

கனடாவின் ஸ்காப்ரோ பகுதியில் இடம்பெற்ற தீ விபத்து சம்பவம் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பின்ச் அவன்யூ மற்றும் பிரைடல்டவுன் செர்க்கல் 02▶



# பிரதமர் ட்ரூடோவின் அரசாங்கத்திற்கு எதிராக வருகின்றது நம்பிக்கை இல்லாப் பிரேரணை!

**இந்த நிலையில் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என பொலியேவ் தெரிவித்துள்ளார்.**

**சபை அமர்வில் கன்சர்வேட்டிவ் எதிர்க் கட்சியின் நாள் தற்காலிகமாக அடுத்த செவ்வாய்க்கிழமை எனத் திட்டமிடப்பட்டுள்ளது.**

**அன்று பியர் பொய்லியெவ் வாக்குறுதியளிக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையை லிபரல் அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரலாம் என எதிர்பார்க் கப்படுகின்றது.**

அவ்வாறு கொண்டு வரப்படுமாயின் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பு புதன்கிழமை நடைபெறும் சந்தர்ப்பம் தோன்றியுள்ளது.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்றுவதற்கு, தற்போதைய 336 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் லிபரல் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை என வாக்களிக்க வேண்டும்.

தற்போது, லிபரல் கட்சிக்கு 154 ஆசனங்களும், கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 119 ஆசனங்களும் உள்ளன.

கடந்த திங்கட்கிழமை நடந்த இடைத் தேர்தலுக்குப் பின்னர், இப்போது புளொக் கியூபெக்குவா 33 தொகுதிகளையும், புதிய ஜனநாயகக் கட்சி 25 தொகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இலையுதிர்கால அமர்வில் கிடைக்கும் முதல் வாய்ப்பில் சிறுபான்மை அரசாங்கத்தை தோற்கடிக்க ஒரு நம்பிக்கையில்லா பிரேரணையை முன்னெடுப்பதாக பியர் பொய்லியேவ் உறுதியளித்திருந்தார்.

இதில் தனக்கு ஆதரவளிக்க ஏனைய எதிர்க்கட்சிகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

இந்த இலையுதிர்கால அமர்வில் ஏழு எதிர்க்கட்சி நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் எந்த ஒரு நாளிலும் எதிர்க்கட்சி அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரலாம்

ஆளும் லிபரல் கட்சிக்கு இதுவரை ஆதரவு வழங்கி வந்த புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவு வழங்குவதை வாபஸ் பெற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் லிபரல் அரசாங்கம் ஆட்டம் காணும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை, நம்பிக்கை இல்லா பிரேரணைக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது குறித்து புதிய ஜனநாயகக் கட்சி உறுதியான தீர்மானங்கள் எதனையும் இதுவரையில் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# புளொக் கியூபெக்குவா கட்சி ட்ரூடோ அரசைக் காப்பாற்றும்?

கியூபெக், செப்ரம்பர் 19

கனேடியர்கள் முன்கூட்டியே பொதுத் தேர்தலை சந்திக்கும் சாத்தியத்தை புளொக் கியூபெக்குவா கட்சி நிராகரிக்கிறது.

இது, புதன்கிழமை பிரதமர் ட்ரூடோவின் அரசாங்கத்தின் எதிராக கன்சர்வேடிவ் கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்கான அவர்களின் விருப்பத்தைக் குறிக்கிறது.

கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லியெவ், செப்டம்பர் 24 அன்று விவாதத்திற்கு அத்தகைய ஒரு பிரேரணையை முன்வைப்பார் எனக் கூறினார். மேலும் குறிப்பாக புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங்கிற்கும் ஆதரவளிக்குமாறு சவால் விடுத்தார்.

லிபரல் கட்சியுடனான தனது வழங்கல் மற்றும் நம்பிக்கை ஒப்பந்தத்தை சமீபத்தில் முடித்துக் கொண்ட சிங், கனேடியர்கள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவால் அலுப்படைந்து விட்டனர் எனக் கூறிய போதிலும், தமது கட்சி அது தொடர்பில் என்ன செய்யப் போகிறது என்பதைக் குறிப்பிட வில்லை.

ஆனால் தாமும், தமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் கியூபெக்கிற்காக வேலை செய்கின்றோம் எனவும், கன்சர்வேட்டிவ் கட்சியினருக்காக அல்ல எனவும் புளொக் கியூபெக்குவா தலைவர் யிவஸ் பிரான்சுவா பிளங்கோ தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரேரணைக்கு 'நாங்கள் இல்லை என்று வாக்களிக்கிறோம்,' என்று அவர் நாடாளுமன்றத்திற்கு வெளியே பிரெஞ்சு மொழியில் செய்தியாளர்களிடம் கூறினார்.



## ஸ்காப்ரோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டடத்தின் ஒன்பதாம் மாடியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இந்தத் தீ விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இந்த விபத்தில் மேலும் ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ விபத்து குறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்துக்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப் படவில்லை.




# வாடிக்கையாளர் திருப்தி தரவரிசையில் பியர்சன் விமான நிலையம் பின்னடைவு!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 19

ரொறன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையம் வட அமெரிக்காவின் மிகப்பெரிய விமான நிலையங்களின் வாடிக்கையாளர் திருப்தி தரவரிசையில் மிகக் குறைந்த இடத்தைப் பெற்றுள்ளது என்று ஒரு புதிய ஆய்வு கண்டறிந்துள்ளது.


ஜே.டி. பவர் தனது வருடாந்த வட அமெரிக்க விமான நிலைய திருப்தி கணக்கெடுப்பை நேற்று வெளியிட்டது.

இதில் ரொறன்ரோ விமான நிலையம், வாடிக்கையாளர் திருப்திக்கு வரும்போது கனடாவின் பரபரப்பான 21 மெகா அளவிலான விமான நிலையங்களில் 20 வது இடத்தைப் பிடித்தது.

ரொறன்ரோ விமான நிலையம் 1,000 புள்ளிகளில் 559 புள்ளிகளைப் பெற் றது, இது பிரிவு சராசரியை விட 36 புள்ளிகள் குறைவாக உள்ளது.

பெரிய அளவிலான விமான நிலையங்கள் வருடத்திற்கு 33 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட பயணிகளுக்கு சேவை செய்யும் விமான நிலையங்களாக வரையறுக்கப்படுகின்றன.

மினியாபோலிஸ்-செயின்ட் போல் சர்வதேச விமான நிலையம் இந்த ஆய்வில் முதல் இடத்தைப் பிடித்தது டன், நியூ ஜெர்சியின் நெவார்க் லிபர்ட்டி சர்வதேச விமான நிலையம் கடைசி இடத்தைப் பிடித்தது.




# யோர்க் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு இளைஞர்கள் பலி!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 19

கெஸ்விக்கில் அமைதியான சுற்றுப்புறத்தில் உள்ள பூங்கா ஒன்றில் நேற்று அதிகாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர் என யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

'அதிகாரிகள் அப்பகுதிக்கு வந்த போது, பேவியூ பூங்காவில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் பாதிக்கப்பட்ட இர ண்டு வயது வந்தவர்களைக் கண்டறிந்தனர். உயிர்காப்பு பணியா ள ர்கள் இருவரையும் காப்பாற்ற முயற்சித்த போதும் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்து விட்டார். ம ற்றையவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்' எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இருவரும் 20 வயதுகளை உடையவர்கள் எனவும் கூறப்பட்டது..

சம்பவத்தை தொடர்ந்து அந்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் அல்லது சந்தேக நபர்களை அடையாளம் காணத் தேடி வருவதாகவும், ஆனால் இதுவரை சந்தேகத்தின் பேரில் எந்தத் தகவலும் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரையில் எந்த ஒரு நபரும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் ஒரு தனிப்பட்ட சம்பவம் எனவும் இந்தத் துப்பாக்கிச் சூட்டினால் பொது மக்களுக்கு பாதிப்பு எதுவும் கிடையாது எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் அருகாமையில் இருந்த பாடசாலைகளுக்கு எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு குழுக்களுக்கு இடையிலான மோதல் சம்பவம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இரு தரப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்திக் கொண்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைப்பதற்கு கனடா அரசு முடிவு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 19

லிபரல் அரசாங்கம் சர்வதேச மாணவர் விசாக்களின் எண்ணிக்கையை மேலும் 10 சதவிகிதம் குறைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான புதிய இலக்கு 437,000 அனுமதிகளாக இருக்கும் என்று அரசாங்கம் கூறுகிறது. 2024 இல் 485,000 அனுமதிகள் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டு, 5,00,000க்கும் அதிகமான சர்வதேச மாணவர்களுக்கு கனடா கல்வி அனுமதி வழங்கியது.

இந்த மாற்றங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் 'சுமார் 300,000 குறைவான கற்கை அனுமதிகளை அளிக்கும்' என்று எதிர்பார்ப்பதாக குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.



வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளில் படிக்கும் மாணவர்களின் வாழ்க்கைத் துணைவர்களுக்கு வேலை அனுமதிப் பத்திரத்தில் ஒட்டாவா அரசு புதிய வரம்புகளை விதிக்கிறது.

தகுதிபெற, விண்ணப்பதாரர்களின் வாழ்க்கைத் துணைவர்கள் குறைந்த பட்சம் 16 மாத கால முதுநிலைத் திட்டத்தில் இருக்க வேண்டும், அல்லது மேலாண்மை அல்லது தொழில்முறைத் தொழில்களில் அல்லது தொழிலாளர் பற்றாக்குறையை அனுபவிக்கும் துறைகளில் பணிபுரியும் வெளிநாட்டுப் பணியாளர்களாக இருக்க வேண்டும்.

சர்வதேச மாணவர்களின் வளர்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய முதுகலை வேலை மற்றும் வாழ்க்கைத் துணை அனுமதி ஆகியவை 'கனேடியர்களுக்கு நாங்கள் கடன் பட்டுள்ளோம், மேலும் சில பகுதிகளில் தொழிலாளர் சந்தை சுருங்கி வரும் பொருளாதாரத்தின் சூழலில், அதற்கேற்ப சரிசெய்ய வேண்டும்' என்று மில்லர் கூறினார்.

ஜனவரியில், லிபரல் அரசாங்கம் புதிய மாணவர் விசாக்களின் எண்ணிக்கையை இந்த ஆண்டு மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் குறைப்பதற்கான தற்காலிக வரம்பை அறிவித்தது.

# பாலியல் குற்றச்செயலில் ஈடுபட்டவருக்கு 20 வருடங்களின் பின் வழக்கு விசாரணை

கனடாவின் மிஸஸாகா பகுதியில் பாலியல் குற்றச்செயலில் ஈடுபட்ட ஒருவருக்கு 20 ஆண்டுகளில் பின் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

16 வயதான சிறுமி ஒருவரையும் 20 வயதான பெண் ஒருவரையும் இந்த நபர் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி மிஸஸாகாவில் 20 வயது பெண் ஒருவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே விதமாக 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி 16 வயது சிறுமி ஒருவர் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் பிரம்டன் பகுதியில் பதிவாகியுள்ளது. இந்த இருவரையும் ஒரே நபர் பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

43 வயதான ஜஸ்டின் ஃபொலி என்பவரே இந்த குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் எனப் பொலிஸார் விசாரணைகள் மூலம் கண்டறிந்துள்ளனர்.




இந்த நபருக்கு எதிராக பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல், ஆயுதப் பயன்பாடு, அச்சுறுத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த நபருக்கு எதிராக வழக்கு விசாரணை முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒன்றாரியோவில் குறுஞ்செய்தி ஊடான மோசடி முயற்சிகள் குறித்து எச்சரிக்கை

ஒன்றாரியோவில் குறுஞ்செய்தி ஊடான மோசடிகள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜயன்ட் டைகர் வாடிக்கையாளர்களுக்கு பரிசு வழங்குவதாகக் கூறி குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

30 டொலர் பெறுமதியான பரிசு கிடைக்கப் பெறுவதாக கூறி மோசடி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மார்க் மார்டின் என்ற நபர் தாம் இந்தக் குறுஞ்செய்தி பற்றிய மோசடியில் சிக்க விருந்தார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த 30 டொலர் பரிசினை பெற்றுக் கொள்வதற்கு வங்கி விவரங்கள் கோரப்பட்ட போது தாம் எச்சரிக்கை அடைந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குறுஞ்செய்தி ஜயன்ட் டைகர் நிறுவனத்தினால் அனுப்பி வைக்கப்பட்டவை அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# வெளிநாடுகளின் தலையீட்டிற்கான 'விளையாட்டு மைதானமாக' கனடா!

## கன்சர்வேடிவ் எம்.பி. மைக்கேல் சோங் காட்டம்

ஒன்ராரியோ, செப்ரம்பர் 19

கனடா வெளிநாட்டு தலையீட்டிற்கான 'விளையாட்டு மைதானமாக' மாறிவிட்டது என்று கன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினரான மைக்கேல் சோங் தெரிவித்துள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் வெளியுறவுத்துறை விமர்சகரான மைக்கேல் சோங், மத்திய அரசு தனது இரகசியக் கலாசாரத்தை கைவிட வேண்டும் என்றும், பொது மக்களுக்கு சிறப்பாகத் தெரிவிக்க அச்சுறுத்தல்கள் குறித்த கூடுதல் தகவல்களை வெளியிட வேண்டும் என்றும் கூறினார்.

பெரும்பாலான உளவுத்துறைத் தகவல்கள் இரகசியமாக இருக்க வேண்டும் என்றாலும், அதிகமான தகவல்களை மறைத்து வைத்திருப்பது நிறுவனங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் கசிவுகளுக்கு வழிவகுக்கும் என்று சோங் கூறினார்.

விசாரணையின் சமீபத்திய பொது விசாரணைகள், வெளிநாட்டுத் தலையீட்டைக் கண்டறிதல், தடுப்பது மற்றும் எதிர்கொள்வதற்கான கூட்டாட்சி நிறுவனங்களின் திறன்கள் குறித்து கவனம் செலுத்துகிறது.

சீனாவின் மனித உரிமைகள் குறித்து சோங் நீண்ட காலமாக விமர்சித்து வருகிறார்.

மே 2023 இல், 2021 இல் கனடாவின் உளவு சேவைக்கு சீன அரசாங்கம் சோங் மற்றும் அவரது குடும்பத்தினரை அச்சுறுத்துவதற்கான வழிகளைப் பார்த்து வருவதாக ஓர் ஊடக அறிக்கையை மத்திய அரசாங்கம் உறுதிப்படுத்தியது.

# வீடு கொள்வனவை ஊக்குவிக்கும் வகையில் அடகு கடன் சட்டங்களில் வருகிறது திருத்தம்

வீடு கொள்வனவு செய்வதை இலகுவாக்கும் வகையில் கனடாவில் அடகு கடன் தொடர்பான சட்டங்களில் சில திருத்தங்கள் செய்யப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் மத்திய அரசாங்கம் இது தொடர்பான சட்ட திருத்தத்தை முன்னெடுக்க உள்ளதாகக் கூறப்படுகின்றது.

எனவே எதிர்வரும் காலங்களில் புதிய சட்டத்தின் பிரகாரம் வீடு ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு அடிப்படை கட்டணமாக மொத்த பெறுமதியில் 20 வீதத்தை செலுத்தத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒரு மில்லியன் முதல் ஒன்றரை மில்லியன் டொலர்கள் பெறுமதியான வீடு ஒன்றை கொள்வனவு செய்யும் போது இவ்வாறு 20 வீதமான அடிப்படைத் தொகையை செலுத்தத் தேவையில்லை என




தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாற்றமானது வீடுகளை கொள்வனவு செய்வோரை ஊக்குவிக்கும்எனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முதல் தடவையாக வீடு கொள்வனவு செய்பவருக்கு 30 ஆண்டுகள் வரையில் அடகு கடன் தவணை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.